

கடவுளின்
விக்னேஷ்

# கடவுளின் ஹைக்கூ

*M* விக்னேஷ்

*நூல் : **கடவுளின் ஹைக்கூ***

*ஆசிரியர் : **.M விக்னேஷ்***

*மின்னஞ்சல் : **vykkyvrisa@gmail.com***

*வெளியீடு **: FreeTamilEbooks.com***

*உரிமை **:Creative Commons Attribution-Non-commercial-No Derivatives 4.0 International License.***

*உரிமை – **கிரியேட்டிவ் காமன்ஸ். எல்லாரும் படிக்கலாம், பகிரலாம்.***

# முன்னுரை

***க**ண் கண்ட கடவுளை கவிஞனாக்கி ,அவன் கண்ட இந்நாள் உலகை கருவாக்கி , உயிரும் மெய்யுமாய் இருப்பவன் சிந்தையில் உயிர்மெய் எழுத்துக்கள் உலாவவிட்டு , அண்டங்கள் காப்பவன் கரங்களில் அமிர்த தமிழை விளையாடவிட்டு, கற்சிற்பங்களில் ஒளிந்து திருக்கோயில் கொண்டவன் வெண் காகிதம் கொண்டு கவிச்சிற்பம் வடித்தால் ....???*

*என்ற கேள்விகளின் கற்பனை தொகுகளே **"கடவுளின் ஹைக்கூ"***

# கடவுளின் கைவண்ணம்



பசுமை சாட்டையில்

நான் சுற்றும் பம்பரம்

***"உலகம்...!"***



மண்ணில் பூத்த கோபுரம்

மேகங்களின் வேகத்தடை

***"மலைகள்...!"***



*நிலமணிந்த நீலச் சேலை*

*உண்டாயின ஆயிரம் மடிப்புகள்*

***"நதிகள்...!"***



பூமியின் பின்னல் இல்லாக் கூந்தல்

தென்றலின் மணக்கோலம்

***"காடுகள்...!"***



*இயற்கை காதலன்*

*ஆறறிவு இல்லா அறிவு ஜீவி*

***"விலங்குகள் ...!"***



*ஆண் பெண் சமத்துவம் பேசும்*

*நிகழ்கால உயிர் ஓவியம்*

***"திருநங்கை...!"***


USA

அச்சு பிழை புத்தகம்

தலைப்பு தன்னம்பிக்கை

***"மாற்றுத்திறனாளி...!"***

# கடவுளின் பிழை



படைத்தல் பிழை

மன்னிக்கமுடியா பெருங்குற்றம

***"மனிதன் ...!"***



ஆசையின் அஸ்திவாரம்

அழிவின் ஆரம்பம்

***"பாலினம்…!"***



இமை தீட்டும் வண்ணமில்லா

தூரிகை

இருதயம் மீட்டும் ஸ்வரமில்லா யாழிசை

***"உணர்வுகள்...!"***



இயற்கை பேரழிவு

தவிர்க்க முடியா பெரும் விபத்து

***"காதல்....!"***



ஆத்திர தாயின்

மூத்த மகன்

***"கோபம்...!"***



உடைத்த ஒரு தேங்காய்க்குள்

ஓராயிரம் கோரிக்கைகள்

***"சுயநலம்...!"***



பொல்லாத மனம்

போதிக்கும் மந்திரம்

***"பேராசை..!"***



*ஆண்டிக்கோலம் பூண்ட கடவுளுக்கு*

*வைர அங்கி*

*அன்னதான உபயமாகும் ஐம்பது ரூபாய்*

***"ஆடம்பரம்...!"***

# காலச்சக்கரம்



மனித இனத்தின் அடையாளம்

எதிர்கால ஆயுதம்

***"ஆறாம் அறிவு ...!"***



வெட்டிய மரம் கட்டிய மண்டபம்

வாசல் அலங்கரிக்கும் வாழை மரம்

***"நவீன மாற்றம் ...!"***



சோம்பேறி தனத்தின் விடுதலை

வியர்வைகளின் கடுங்காவல் தண்டனை

***"கண்டுபிடிப்புகள்...!"***



அளவில்லா தரவுகள் குறைவில்லா

பேட்டரிகள்

இந்நாளின் அதிகபட்ச வேண்டுதல்

***"தொழில்நுட்பம் ...!"***


HELP !!

மாடர்ன் நோக்கு வர்மம்

கையடக்க அழகி

***"கைபேசி...!"***



மடி தவளும் செயற்கை குழந்தை

எந்திரனின் தந்தை

***"மடிக்கணினி...!"***



# காலமான தாத்தாவின் கைபேசி குறுஞ்செய்தி

*Your Plan is expired.*

***"இணையம்...!"***



உதடுகள் இல்லா உரையாடல்

எழுத்துகளின் கலப்புத்திருமணம்

***"குறுஞ்செய்தி ...!"***



இமை திரைமேல் கொண்ட காதல்

மீள முடியா பெரும் மயக்கம்

***"தொழில்நுட்ப போதை ...!"***



படைத்த  உலகை அழித்தது போதும்

படைத்தவனை தேடி அழிப்போம்

***"விண்வெளிப்பயணம்...!"***

# கலிகாலம்



தீயோரின் உறைவிடம்

நல்லோரின் நரகம்

***"கலியுகம் ...!"***



அகராதி பிடித்த மனிதர்களின்

தனி அகராதி

***"மதம் ...!"***


VOTE

*வாக்குரிமை இல்லா என்*

*தட்டிலும் 500 ரூபாய்*

***"அரசியல்...!"***



கண்களை குத்தாததன் விளைவு

பொய் வாக்குறுதி என்னிடமும்

***"அரசியல்வாதி...!"***



*லட்சங்கள் பல வேண்டிய பிராத்தனை*

*காணிக்கையாகும் சில்லரைகள்*

***"பணத்தாசை ...!"***


भारतीय रिज़र्व बैंक
RESERVE BANK OF
500
पाँच सौ रुपये

*படைத்தவன் கல்லானான்*

*பணம் படைத்தவன் கடவுளானான்*

***"ஊழல்...!"***



*மனிதனின் எண்ணற்ற தவறுகள்*

*கனமாகும் கோவில் உண்டியல்*

***"பாவங்கள்...!"***



இரண்டு கால் மிருகம்

செய்யும் அதர்மம்

***"குற்றம்...!"***



வறுமையில் இளைத்தவன்

மாட்டிக்கொண்ட ஓட்டை

***"சட்டம்...!"***

# கடவுளெனும் காட்சிப்பொருள்



*அண்டம் காப்பவன் கதவுகளில்*

*ஐந்து அடுக்கு பூட்டு*

***"கோயில்கள்....!"***



இருப்பவனுக்கு காட்சித்திரை

இல்லாதவனுக்கு காட்சிப்பிழை

***"சிறப்பு தரிசனம்...!"***



எரிகின்ற நெருப்பில் எங்கு தேடுவேன்

கரைகின்ற என் தோஷங்கள்

***"யாகம்...!"***


51077
51078
51079
51080

பத்து ருபாய் சீட்டில்

பாவ மன்னிப்பு

***"அர்ச்சனை ...!"***

| | | | |
|---|---|---|---|
| வியாழன் | செவ்வாய் | சுக்கிரன் | புதன் |
| சனி | | | சந்திரன் |
| சனி | | | சூரியன் |
| வியாழன் | செவ்வாய் | சுக்கிரன் | புதன் |

# பொருத்தமில்லா மனங்களின்

# பத்து பொருத்தங்கள்

***"ஜாதகம்...!"***



சோதனை ஏவுகணைகள்

போதிக்கும் வாழ்க்கை அனுபவங்கள்

***"நவகிரங்கள்...!"***



*ஓயாத பிராத்தனையின் பலன்*

*தண்டனைகளின் வாய்தா*

***"பரிகாரம்...!"***

# கடவுளின் திருவிளையாடல்



*வாழ்ந்து பார்ப்பது - சிலரை*

*வாழவைத்து பார்ப்பது*

***"வாழ்க்கை ...!"***



*நிரந்தரமில்லா வாழ்க்கையின்*

*நினைவு சின்னம்*

***"வயோதிகம்...!"***



*நான் படைக்காத ஒன்று*

*நான் படைப்பதாக பலர் சொல்வதும் உண்டு*

***"நோய்...!"***



காலமெனும் கடத்தல்காரன் கடத்தும்

நினைவெனும் பொக்கிஷம்

***"மறதி...!"***



*புண்ணியங்களின் சலுகை*

*பாவங்களின் வட்டி*

***"ஆயுள்...!"***



அன்பேனும் விதை

துளிர்விட்ட வேர்

***"மனிதாபிமானம்...!"***



*பிறக்கும் போது விதிக்கப்பட்டது*

*பிறக்கும் முன்பே விதைக்கப்பட்டது*

***"விதி...!"***



*இறந்தகால பாவங்களின்*

*நிகழ்கால தண்டனைகள்*

***"கர்மா ...!"***



நான் இட்ட முற்று புள்ளி

கவிதைக்கும் உங்களுக்கும்

***"மரணம்...!"***

# ஆசிரியர் குறிப்பு

என் பெயர் **விக்னேஷ் .*M*** ,

"ஹைக்கூ வடிவில், இது என் **இரண்டாவது** புத்தகம் மற்றும் கவிதை படைப்புகளில் இது என் **நான்காவது** புத்தகம்".

தமிழ் மேல் கொண்ட பற்றை , பயின்ற கணிப்பொறியியல் வழி

மேம்படுத்தும்
நோக்கத்தோடு,மின்னணு புத்தகங்கள்
எழுதத் தொடங்கி, இன்று என்
நான்காவது புத்தகத்தை
வெளியிடுகிறேன் .

மேலும் தமிழ் மொழி
வளர்ச்சிக்காகவும்
,சுயஎழுத்தாளர்களின்
படைப்புக்களை மின்னணு மாற்றமாக
பதிப்பிட வழிவகை செய்யவும்,

“**மின்கவி**” ***(https://www.minekavi.com )***

*என்றவலைத்தளத்தை உருவாக்கி*

*நிறுவியுள்ளேன்.தனிமனித*

*அடையாளம் உருவாக்கும்*

*நோக்கத்தோடும், இக்காலத்திற்கேற்ப*

*எளிய வரிகள் கொண்ட கவிதைகள்*

*படைக்கும் நோக்கத்தோடும்*

*மின்னணு புத்தகங்களை*

***Amazon Kindle Direct Publishing*** *வழி*

*படைத்து வருகிறேன்.*

மேலும் என் படைப்புகளை

*freetamilebooks.com* தளத்திலும்

பதிவிட்டு வருகிறேன்.

**“வாசகர்களாகிய தங்களின்,மேலான ஆதரவும் மற்றும் புத்தகம் தொடர்பான கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன “.**

**தொடர்புகொள்ள;**

**மின்னஞ்சல்** *: vykkyvrisa@gmail.com*

**வலைத்தளம்** *:*

*amazon.com/author/mvignesh &*

*https://www.minekavi.com* ***(Independent Writers)***

**தொலைபேசி** *:9626227537*